NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2012

# TAMIL FIRST ADDITIONAL LANGUAGE: PAPER II

Time: 2 hours — 70 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 9 pages.
2. Read the instructions to each question carefully.
3. Answer one question from Section A and one question from Section B, taking note of choices given.
4. All answers must be in **TAMIL**.

---

IEB Copyright © 2012

**SECTION A**

## பகுதி ஒன்று

1. **கீழ்வரும் கதையை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை தருக.**

## இல்லறம் புகுந்த துறவி

ஓர் ஊரில் ஒரு திருமடம் இருந்தது. அம்மடத்தில் பல துறவிகள் இருந்தனர். அவர்களுள் ஒருவர் மிக இளைஞர். அவருக்கு அகவை இருப்பத்திரண்டு தான் ஆகியது. அவர் தாடியும் சடைமுடியும் வளர்த்தார். கழுத்தில் சிவக்கண்மணி மாலை அணிந்து கொண்டார். இடையிலே கண்டவர்களுடைய கண்ணைப் பறிக்கும்படியான செந்நிறம் பொருந்திய காவி வேட்டியைக் கட்டிக் கொண்டார். அவருடைய தோற்றம் முற்றத்துறந்த முனிவரைப் போலக் காணப்பட்டது. அவருடைய பெயர் உண்மையறிவானந்தர்.

உண்மையறிவானந்தர் சில சமயங்களிலே கையில் அறிவு நூல்களை ஏந்திப் படித்துக் கொண்டிருப்பார். சில சமயங்களிலே கண்ணை மூடி உள்ளத்தை மெய்ப்பொருளின் பால் படுத்தியவர் போல அமர்ந்திருப்பார். அவர் அவ்வாறு அமர்ந்திருந்தாலும் அவருடைய உள்ளம் ஒழுங்காக இருப்பதில்லை. பட்டிமாடு போல் பல வகையான எண்ணங்களிலே திரிந்து கொண்டிருந்தது. அவருடைய ஒழுக்கமும் நல்லொழுக்கமாக இல்லை. அவருடைய கோலம் பொய்க்கோலமே என்று பலரும் தெரிந்து கொண்டனர். பலவாறு உண்மையறிவானந்தரை இகழ்ந்து தூற்றவும் தொடங்கினார்கள்.

நாளடைவில் உண்மையறிவானந்தர் ஒரு போத் துறவி என்று எங்கும் பெயர் ஆகிவிட்டது. உண்மையறிவானந்தர் உண்மையாகவே நல்லொழுக்கத்துடன் இருப்பதற்குப் முயன்று பார்த்தார். மனம் ஒரு சிறிதும் கட்டுப்படவே இல்லை.

IEB Copyright © 2012

1.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிரப்புக:

1.1.1 ஓர் ஊரில் ஒரு ________________ இருந்தது. (2)

1.1.2 அவர் ________________ சடைமுடியும் வளர்த்தார். (2)

1.1.3 அவருடைய ________________ உண்மையறிவானந்தர். (2)

1.2 சரியான விடை தருக:

1.2.1 யாருக்கு அகவை இருப்பத்திரண்டு? (2)

1.2.2 உண்மையறிவானந்தர் எப்படிப்பட்ட நூல்களைப் படிப்பார்? (2)

1.2.3 அவருடைய கோலம் எப்படிப்பட்டது? (3)

1.3 உண்மை அல்லது உண்மை அல்ல என்று கூறுக.

1.3.1 துறவிகளுள் ஒருவர் மிக இளையர். (2)

1.3.2 மிக இளைஞரின் உள்ளம் ஒழுங்கானது. (2)

1.4 எதிர்ச்சொல் தருக: உம். மேல்: கீழ்

1.4.1 சில (2)

1.4.2 உண்டு (2)

1.5 ஒருமைக்குப் பன்மை தருக:

1.5.1 கண் (2)

1.5.2 திருமடம் (2)

1.6 இல்லறம் புகுந்த துறவியைப் பற்றி 10 – 12 வரிகள் எழுதுக. (10)

**[35]**

**அல்லது /(OR)**

1.7 கொன்றைவேந்தேன் விளக்கக் கதைகளிருந்து:

<u>பலரையும் பகைத்த பச்சையப்பன்</u>

என்ற கதையைப் பற்றி சுமார் 20 வரிகள் எழுதுக :

**[35]**

2. கீழ்வரும் பகுதியைப் படித்து பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக:



மற்றைநாட் கண்ட மரத்தே குயில்லை
சுற்றுமுற்றும் பார்த்துத் துடித்து வருகையிலே
வஞ்சனையே! பெண்மையே! மன்மதனாம் பொய்த்தேவே!
நெஞ்சகமே! தொல்விதியின் நீதியே! பாழுலகே!
கண்ணாலே நான் கண்ட காட்சிதனை என்னுரைப்பேன்
பெண்ணால் அறிவிழக்கும் பித்தரெலாங் கேண்மினோ!
காதனைப் போற்றும் கவிஞரெலாங் கேண்மினோ!
மாதரெலாங் கேண்மினோ! வல்விதியே கேளாய் நீ!
மாயக் குயிலோர் மரக்கிளையில் வீற்றிருந்தே
பாயும் விழிநீர் பதைக்கும் சிறியவுடல்
விம்மிப் பரிந்துசொலும் வெந்துயர்ச்சொல் கொண்டதுவாய்
அம்மவோ! மற்றாங்கோர் ஆண்குரங்கு தன்னுடனே
ஏதேதோ கூறி இரங்கும் நிலைகண்டேன்
தீதேது? நன்றேது? செய்கைக் தெளிவேது?
அந்தக் கணமே அதையும் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளில் கைசேர்ந்தேன்
கொன்றுவிடு முன்னே குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே
பேடை குயிதனைப் பேசியது 'வானரரே!

2.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிரப்புக:

2.1.1 கண்ணாலே நான் கண்ட ________________ என்னுரைப்பேன். (2)

2.1.2 வல்விதியே ________________ நீ. (2)

2.1.3 ________________ கூறி இரங்கும் நிலை கண்டேன். (2)

IEB Copyright © 2012

2.2 சரியான விடை தருக:

2.2.1 குயில் பாட்டை எழுதியவர் யார்? (2)

2.2.2 மாடன் யார்? (2)

2.2.3 யார் குயிலாகப் பிறந்தார்? (2)

2.2.4 குரங்கன் எவ்வாறு பிறந்தான்? (2)

2.2.5 மாடன் எவ்வாறு பிறந்தான்? (2)

2.3 எதிர்ச் சொற்கள் தருக:

2.3.1 முன் (2)

2.3.2 அது (2)

2.4 குரங்கனைப் பற்றி 4 – 5 வரிகள் எழுதுக. (5)

2.5 இளவரசனைப் பற்றி 8 – 10 வரிகள் எழுதுக. (10)

**[35]**

**அல்லது/(OR)**

2.6 குயில் பாட்டைப் பற்றி 15 – 20 வரிகள் எழுதுக.

**[35]**

IEB Copyright © 2012 

## SECTION B

## பகுதி இரண்டு

1. கீழ்வரும் கவிதையை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை தருக.

### இயற்கையை அழிக்காதே!

இயற்கையே நம்மை வாழ்விக்கிறது. இவ்வியற்கை வளத்தை அழிக்கு தன்மையில், மரம் வெட்டுதல், விலங்குகளை அழித்தல், காட்டின் பரப்பை குறைத்தல், விளை நிலங்களை வீடாக்கல் போன்ற செயல்களைச் செய்த கூடாது. இயற்கை வளங்களை அழித்து நமக்கு நாமே கேடு தேடிக்கொள் வேண்டாம்.

வெட்டுதல் நிறுத்தி மரங்களையே
பட்டு விடாமல் காத்திடுவாய்!
காட்டு விலங்குக் கூட்டந்தனைக்
கவனமொடு நீ போற்றிடுவாய்!

இயற்கை காட்டும் வழியினிலே
இயங்கி வந்தால் நன்மைவரும்!
செயற்கை வழியில் செயல்பட்டால்
சீரெல்லாம் அழிந்து துன்பம்வரும்

நிலங்களே வீடாய் மாறிவிடின்
நிலத்தடி நீரும் குறைந்துவிடும்
இலக்குகள் இன்றி நடமாடி
இயற்கையைச் சீண்ட நினையாதே!

— *கவிஞர் இலத்தூர் கி. சங்கரநாராயணன்*

1.1 கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லால் நிரப்புக:

1.1.1 பட்டு ________________ காத்திடுவாய். (1)

1.1.2 ________________ காட்டும் வழியினிலே. (2)

1.1.3 இலக்குகள் இன்றி ________________. (2)

1.2 கீழ்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை தருக.

1.2.1 எதைப் பட்டு விடாமல் காத்திடுவாய்? (2)

1.2.2 எதைத் கவனத்தோடு போற்றிடிவாய்? (2)

1.2.3 எப்பொழுது நன்மை வரும்? (2)

1.2.4 செயற்கை வழியில் செயல்பட்டால் என்ன ஆகும்? (2)

1.2.5 எப்பொழுது நிலத்தடி நீரும் குறைந்துவிடும்? (2)

IEB Copyright © 2012

1.3 பன்மை தருக:

1.3.1 மரம் (2)

1.3.2 வழி (2)

1.4 எதிர்ச்சொல் தருக: உம். அங்கே: இங்கே

1.4.1 வா (2)

1.4.2 இன்பம் (2)

1.4.3 பகைவன் (2)

1.5 மேற்கண்ட கவிதையைப் பற்றி 8 – 10 வரிகள் எழுதுக. (10)

**[35]**

**அல்லது(OR)**

1.6 திருவள்ளுவரைப் பற்றி 25 வரிகள் எழுதுக.

**[35]**

IEB Copyright © 2012

2. மூன்று: தங்கப் பதக்கம்

2.1 கீழ்வரும் பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் கேள்விகளுக்குப் பதில் தருக:



லட்சுமி : அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். என் சொந்தக்காரங்க வீட்ல ஒரு பெண் இருக்கு. பேசி முடிச்சிடலாங்க.

சௌத் : லட்சுமி என் மகனுடைய நியாயமான சந்தோஷத்துக்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன்.

2.1.1 முடிவு செய்க:

(a) நான் அவனுக்கு ______________ கேட்பேன். (2)

(b) ஆனா நான் யாருக்கும் ______________ செய்ய மாட்டேன். (2)

(c) நான் யார்கிட்ட போயி பெண் ____________. (2)

2.1.2 சரியான விடை தருக:

(a) இந்த நாடகத்தின் கருத்து என்ன? (2)

(b) ஜெகன் ஏன் வீட்டை விட்டு ஓடிவிட்டான்? (2)

(c) இந்த நாடகத்தில் லட்சுமி யார்? (2)

(d) பல ஆண்டுகளுக்கு ஜெகன் எங்கே இருந்தான்? (2)

2.1.3 பன்மை தருக:

(a) வேலை (2)

(b) பெண் (2)

(c) மரம் (2)

2.1.4 எதிர்ச்சொல் தருக:

(a) இல்லை (2)

(b) சிறிய (2)

(c) பகல் (1)

2.1.5 ஜெகனை ப் பற்றி 10 – 12 வரிகள் எழுதுக. (10)

**[35]**

**அல்லது/OR**

2.2 தங்கப் பதக்கம் என்ற கதையைப் பற்றி 15-20 வரிகள் எழுதுக.

**[35]**

**35 marks**

**Total: 70 marks**

IEB Copyright © 2012